**செ.வெ.எண்: 49** **நாள்: 22.09.2016**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டம் பணிகள் விரைவில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருப்பராய்த்துறை அருகில் காவேரி ஆற்றில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கான காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணற்றினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் வெல்லமண்டி என். நடராஜன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி.எஸ்.வளர்மதி அவர்கள், திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ப.குமார் அவர்கள், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு. டி.ரத்தினவேல் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் திரு.பி.கே. வைரமுத்து அவர்கள், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம் அவர்கள் ஆகியோர் 20.09.2016 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பின்னர் புதுக்கோட்டை மாவட்டத்தில் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள நீர் உந்து நிலையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் திரு.பி.கே. வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த நீர் உந்து நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பேசியதாவது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இரண்டு கட்டங்களாக காவேரி கூட்டுக்குடிநீர் திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டுள்ளார்கள். இதன் ஒரு கட்டமாக தமிழக அரசு நமது மாவட்டத்தை சேர்ந்த புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை, அன்னவாசல், பொன்னமராவதி, திருமயம், அரிமளம், குன்னான்டார்கோவில் (பகுதி) புதுக்கோட்டை (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 1766 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம் எஸ். புதூர் மற்றும் சாக்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 125 குடியிருப்புபயனடையும் வகையில் காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு பொது மக்கள் பயனடையும் வகையில் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.301.50 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்ற உத்தரவிட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில் இத்திட்டத்திற்காக திருச்சி மாவட்டம் திருப்பராய்த்துறை அருகில் காவேரி ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணறு, நமது மாவட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாத்தூர் ஊராட்சி, கே.கே. நகர், மதயானைப்பட்டி, பூதக்குடி, விராலூர்(பாறைப்பட்டி), அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ராப்பூசல், இடையப்பட்டி, ஆலத்தூர், கிளிக்குடி, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேலத்தானியம், மறவாமதுரை, நகரப்பட்டி, அம்மன்குறிச்சி, திருமயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேலப்பனையூர், குலமங்கலம், ஓலைக்குடிப்பட்டி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த நீர் உந்து நிலையங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வின் போது காவேரி கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகளில் மீதமுள்ள பணிகளை மிகவிரைவில் முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் இதன் மூலம் நமது மாவட்டத்தை சேர்ந்த பொது மக்களுக்கு மிகவிரைவில் காவேரி நீர் வரவுள்ளது என்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் திரு.பி.கே. வைரமுத்து அவர்கள் பேசினார்.

**இந்த நீர் உந்து நிலையங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பேசியதாவது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இரண்டு கட்டங்களாக காவேரி கூட்டுக்குடிநீர் திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள நீர் உந்து நிலையங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும், இத்திட்டத்திற்கு தற்போதுள்ள நீர் ஆதாரங்கள் மூலம் கிடைக்கும் 10/20 லிட்டர் போக மீதமுள்ள அளவான 30/20 லிட்டர் குடிநீர் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் உச்சக்கட்ட குடிநீர் அளவாக நாள் ஒன்றுக்கு 23.12 மில்லியன் லிட்டர் வழங்கப்படும். மேலும் இத் திட்டத்தின் கீழ்மொத்தம் 257 தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைக்கப்படும். இத்தொட்டிகள் மூலம் காவிரி ஆற்றில் இருந்து பெறப்படும் குடிநீர் சுமார் 2634 கி.மீ நீளத்திற்கு பதிக்கப்பட உள்ள குடிநீர் எடுத்துச் செல்லும் குழாய்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு ஏற்கெனவே உள்ள 1477 மற்றும் புதிதாக அமைக்கப்பட உள்ள 98 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு வழங்கப்படும். பின்பு அங்கிருந்து ஏற்கெனவே உள்ள பகிர்மானக் குழாய்கள் மற்றும் புதிதாக போடப்பட உள்ள 62 கிமீ பகிர்மானக் குழாய்கள் மூலம் மக்களுக்கு குடிநீர் வழங்கப்படும்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் நீர் சேமிப்பு கிணறு அமைக்கும் பணிகள், குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள், தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள், மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் கட்டும்பணிகள், குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள், ஆற்றின் குறுக்கே குடிநீர் குழாய் எடுத்துச் செல்ல தேவையான பாலங்கள் அமைக்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. இப்பணிகளில் தற்போது 90 விழுக்காடுகள் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து இம்மாத இறுதிக்குள் குடிநீர் நீரேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் சோதனை ஓட்டத்திற்கு பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருகரங்களால் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது. மேலும் இக்கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலமாக உச்சக்கட்ட அளவாக 6,65,125 மக்கள் பயன்பெறுவார்கள் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரிய திருச்சி கோட்ட மேற்பார்வை பொறியாளர் திரு.எஸ்.சின்னச்சாமி, தஞ்சாவூர் மண்டல தலைமை பொறியாளர் திரு.ராமச்சந்திரன், திருச்சி கோட்ட நிர்வாக பொறியாளர் திரு.சேகர், உதவி நிர்வாகப் பொறியாளர் திரு.அழகப்பன்(புதுகை), ஒன்றியக் குழுத் தலைவர்கள் திரு.சுப்பையா, திரு.பழனியப்பன், ஒன்றியக் குழுத் துணைத் தலைவர்கள் திரு.ராமு, திரு.திருமூர்த்தி, ஆத்மா குழுத் தலைவர் திரு.சாம்பசிவம், நிலவள வங்கித் தலைவர் திரு. பழனியாண்டி, இலுப்பூர் பேரூராட்சித் தலைவர் திரு.குருபாபு, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் திரு.முத்துச்சாமி, வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

.